2002 மே 7]

அங்காடிகள் மூலம் ரேசன் பொருட்களைப்பெற நொச்சிக்குட்டை, கலசப்பாடி, நெலமாங்கடை ஆகிய மூன்று கிராமங்களையும் சேர்த்து மொத்தம் 48 கிராமங்களுக்கும் தனித்தனியாய் குறைந்தது 3 நியாயவிலைக் கடைகளாவது நம்முடைய அரசு அமைத்துக் கொடுப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மலைப் பகுதியிலே வசிக்கின்ற மக்களுடைய குறைகளைப் போக்குவதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த நடமாடும் கடைகளை நடத்துகிற அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த நொச்சிக்குட்டை போன்ற பகுதிகளுக்கு ரோடு வசதி உருவாகி இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக அந்த நடமாடும் ஊர்திகளை அங்கே அனுப்பி, மக்களுக்கு அந்த நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொருட்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதனையும், அப்படிப்பட்ட வாய்ப்பினை உருவாக்குகிற வகையிலே அந்த ரோடுகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுக்கின்றபோது, இந்த வண்டிகளையும் அங்கே அனுப்பி வைப்பதிலே எந்தச் சிரமமும் இருக்காது. மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் கிடைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 298, திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

298—

வெளி மாநிலங்களுக்கு அரிசி

***9758—திரு. வி. ஜெயராமன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மே 7

தமிழகத்திலிருந்து மோட்டா ரக டி.கே.எம். 9 ரக நெல்லை வெளி மாநிலத்திற்கு நெல்லாக எடுத்துச் செல்ல அனுமதித்துள்ளதற்குப் பதிலாக அரிசியாக மட்டும் எடுத்துச் செல்ல அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

டி.கே.எம். 9 ரக நெல் மற்றும் அரிசி இரண்டையும் மற்றும் எல்லா ரக அரிசியையும் வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நெல்லாகவும், அரிசியாகவும் இரண்டு வகையிலும் எடுத்துச் செல்லலாம் என்று தமிழக அரசினுடைய அறிவிப்பு உள்ளது. இதற்குப் பதிலாக அரிசியாக மட்டும்தான் எடுத்துச் செல்ல வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிடுமானால், தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே இருக்கிற ஏராளமான அரிசி ஆலைகளிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு. அதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அதிகப்படியான விலை கிடைக்க வேண்டும் என்கின்ற நோக்கத்திற்காகத்தான் 32 ஆண்டுகாலம் இருந்த அந்தத் தடையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தைரியமாக check-post-களை எல்லாம் remove செய்து, நெல்லையும், அரிசியையும் எடுத்துக்கொண்டு செல்லலாம் என்கின்ற ஆணையை இட்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய நெல்லுக்கு அதிகப்படியான விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலே திறக்கப்பட்டிருக்கிறது. வெளியிடப்பட்டிருக்கிற இந்த ஆணை அவர்களுக்குப் பயன்பெறுகிற வகையிலே முழுமையாக இப்போது செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நெல்லையோ, அரிசியையோ வியாபாரிகள் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப எடுத்துக் கொண்டு போவதை இந்த அரசாங்கம் தடை செய்யாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. ஜெயராமன்.

2002 மே 7]

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு விவசாயிதான். விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நீண்டகால ஆராய்ச்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கிற இந்த முடிவை வரவேற்கிறேன். ஆனாலும், அண்டை மாநிலமான கேரளாவிலேதான் இந்த டி.கே.எம். 9 ரக அரிசியை அதிகமான மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அரிசியாக என்று மட்டும் அனுமதிக்கும்போது, கிராமங்களிலே இருக்கிற ஆயிரக்கணக்கான மக்கள் அரிசி ஆலைகள் மூலமாக வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, டி.கே.எம். 9 ரக நெல்லை, அரிசியாக மட்டும்தான் கொண்டு செல்ல வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிடுவதனால் விவசாயிகளுக்கு எந்த வகையான பாதிப்பும் ஏற்படாது. தமிழகத்திலே அரிசி ஆலைகளின்மூலம் வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டி.கே.எம். 9 ரக நெல், அரிசி என்பது, தமிழ் நாட்டிலே தமிழக மக்களாலே அதிகமாக உபயோகிக்க முடியாத ஒரு ரக நெல் ஆகும். ஆகவே, நமக்குத் தேவையில்லாத அந்த நெல்லை, அது நெல்லாகப் போனாலும் சரி, அரிசியாகப் போனாலும் சரி, அதனாலே அரசுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லை. விவசாயிகளுக்கு நெல்லுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதைத் திறக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அது எடுத்துப் போகிறவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. அவர்கள் நெல்லாகவும் எடுத்துக்கொண்டு போகலாம், அரிசியாகவும் எடுத்துக்கொண்டு போகலாம் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.கே.எம். 9 மற்றும் இதர ரக நெல் எவ்வளவு வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது? இப்படி அனுப்பப்படுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கான ஏற்பாடு என்று சொன்னார்கள். ஆனால், இப்படி வெளி

[2002 மே 7

மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கிறபோது, வியாபாரிகள் மூலமாக நல்ல விலை கிடைக்கவில்லை என்றுதான் சொல்லப்படுகிறது. அப்படி விலை பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறதா? எவ்வளவு நெல் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய மிகப் பெரிய கோரிக்கை, நீங்கள் அந்த check post-களை எல்லாம் remove செய்யுங்கள் என்பது. அதன் மூலமாக இந்த டி.கே.எம். 9 ரக நெல்லை வெளி மாநிலங்களிலிருந்து வியாபாரிகள் வந்து வாங்கிக்கொண்டு போவதாலேயும், கேரளாவிலேயிருக்கிற மக்கள் அதிகம் இங்கே வந்து வாங்கிக்கொண்டு போவதாலேயும், எங்களுக்கு அதிகப்படியான விலை கிடைக்கும் என்கின்ற கோரிக்கையை இந்த அரசாங்கத்திற்கு வைத்த காரணத்தினாலேதான், அந்தத் தடையை இந்த அரசு நீக்கியிருக்கிறது. இந்த அடிப்படையிலே டி.கே.எம். 9 ரக நெல் மட்டுமல்ல, மற்ற ரக நெல்கூட நம்மிடத்திலே நிறைய stock இருக்கிற காரணத்தாலே, தமிழகத்திற்கு வேண்டிய அளவிற்கு உணவுப் பொருட்கள் stock இருக்கிற காரணத்தினாலே, ஏறக்குறைய 9 இலட்சம் டன் நெல்லும், அரிசியும் கையிருப்பு இருக்கிற காரணத்தினாலே, இந்த அரசாங்கத்திற்குத் தேவைக்கு மிகுதியாக இருக்கிற காரணத்தினாலேதான், மற்றவர்கள் எல்லாம் பயன்பெற வேண்டும்; நம் விவசாயிகளும் பயன் பெறவேண்டும்; நல்ல விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆணையை இட்டிருக்கிறோம். அதனாலே அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவலின் அடிப்படையிலே வியாபாரிகள் வந்து இந்த டி.கே.எம். நெல்லை வாங்கிச் செல்வதனாலே, விவசாயிகளுக்குக் கூடுதல் விலை கிடைத்திருக்கிறது என்ற தகவல்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் சொல்லியிருக்கிற இந்த விவரத்தை வேண்டுமானால் விசாரித்துப் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலேயிருந்து நெல், அரிசி நம்முடைய மாநிலத்திற்கு அதிக அளவிலே வருகிறது. ஆனால், இங்கே விவசாயிகள் நெல் விற்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே,

2002 மே 7]

தமிழகத்திலே அரிசிக்கு வரி போட்டிருப்பதைத் தவிர்த்து, வெளி மாநிலங்களிலேயிருந்து வருகிற நெல்லுக்கு, அரிசிக்கு வரி விதித்து, அதன் மூலமாகத் தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுடைய நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல், அரிசியைப் பொறுத்தவரை ஒரே food zone என்பதுதான் இந்திய அரசினுடைய கொள்கை. அந்தக் கொள்கையை நாம் நிறைவேற்ற வேண்டுமென்று காலங்காலமாக, கடந்த காலத்திலேயிருந்து மத்திய அரசு தமிழக அரசை வற்புறுத்தி வந்துள்ளது. ஆனால் கடந்த அரசு தைரியமாக அதை எடுக்க முடியாத நிலையிலே இருந்தது. ஆனால் இந்த அரசு தைரியமாக மத்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒரே food zone-ஆகக் கொண்டு வருகிற அந்த அடிப்படையிலே இப்போது அந்தத் தடையை நீக்கியிருக்கிறோம். ஆகவே, கேரளாவில் இருந்தும், கர்நாடகத்தில் இருந்தும், ஆந்திராவில் இருந்தும் வருகின்ற அரிசியைத் தடுக்க வேண்டிய அவசியம் நமக்கு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 299, திரு சி. இராசேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

299—

தனி வட்டம்

***1916—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?